வலம்புரி
VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | பங்குனி 16 | சனிக்கிழமை (30.03.2002) | தொலைபேசி 3378 | ஒலி 101

கைஷறி
பல்கட்டும் இடம்

LUXURY
DENTAL
WORKS
சிங்கப்பூர் நுட்பமுறையில் சாங்குப்பற்கள் கட்டுதல் கிளிப் போடுதல் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.
குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

### வடக்கு- கிழக்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்

# புலிகளின் அரசியல் பணிகள்

# ஏப்ரல் 01 ந் திகதி ஆரம்பம்!

## யாழ்ப்பாணத்தில் 8 ந் திகதிக்கு பின்னர்

(நமது வவுனியா நிருபர்)

**வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் யாழ்ப்பாணம் தவிரந்த ஏனைய மாவட்டங்களில் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் பிரவேசம் செய்து தமது அரசியல் பணியில் ஈடுபடவுள்ளதாக விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக நேற்று அறிவித்துள்ளனர்.**

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் நிரந்தர யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்து ஒரு மாத காலம் பூர்த்தியானதும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் இதன் அடிப்படையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாணம் தவிர்ந்த மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் ஏப்ரல் 1ம் திகதி தமது அரசியல் பணிகளை

(8ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லீம்கள் அஞ்சவேண்டியதில்லை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக முஸ்லீம் மக்கள் எந்தவிதமான அச்சமும் கொள்ளத் தேவையில்லை புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீற மாட்டார்கள் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும் போது எந்தவொரு இனத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வே காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார் (வ)

## வட - கிழக்குப் புனரமைப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்படும்

### பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் புனரமைப்பிற்கான ஒதுக்கீடுகளை அரசு அதிகரிக்கவுள்ளதாக பிரதமர் ரணில் வீக்கிரமசிங்கா தன்னை சந்தித்த தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற பிரதிநிதிகளிடம் தெரவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமர்ப்பித்துள்ள முதலாவது வரவுசெலவுத் திட்டத்தில் வடக்குக் கிழக்கு புனர்மைப்பு வேலைகளுக்கு போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யவில்லைஎன தமிழர் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து எடுத்துக் கூறியிருந்தனர்.

வரவு் செலவுத் திட்டத்தில்

(8ம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத ஒழிப்புக்கு இலங்கை முழு ஆதரவு தரும்

### வெளிவிவகார அமைச்சர் உறுதி

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிராக பொதுநல வாய நாடுகளின் தலைவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை முழுமையான ஆதரவு தருமெனஇலங்கை வெளி விவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வாதுவ விலா ஒசியன்'' விடுதியில் உலகப் பயங்கர வாதமும் ஜனநாயகத்தின் பாதுகாப்பும்'' எனும் தொனிப் பொருளில் இடம் பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட நிரந்தர யுத்த நிறுத்தமானது

(8ம் பக்கம் பார்க்க)

### தேசிய அரசுக்கு ஆதரவு வழங்கும்

## ஸ்ரீ.சு.கட்சி உறுப்பினர்கள் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய அரசொன்றை அமைப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர். மைத்திரிபால ஸ்ரீசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அண்மையில் கூடிய போதே கட்சியின் செயலாளர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அப்போது கூட்டத்தில்

8ம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சில் தாய்லாந்து பங்கேற்காது

### நோர்வே பிரதியமைச்சர் தகவல்

(கொழும்பு)

அரசும் புலிகளும் நேரடி சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு தாய்லாந்து இடமளிக்கிறதே தவிர பேச்சுவார்த்தையில் அந் நாடு எந்த விதத்திலும் பங்கேற்காது என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் கெல்கீசன் தெரிவித்துள்ளார்.

அரசு புலிகள் பேச்சுவார்த்தையை தாய்லாந்து தலைநகர் பாங்கொங்கில் ஆரம்பிப்பது தொடர்பாக ஹெல்கீசன் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் சரக்கியாட் சதிரத்தையுடன் நேற்று விரிவாக ஆராய்ந்தார்.

தாய்லாந்து வெளிவிவகார அமைச்சருடன் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நோர்வேயை பொறுத்தவரையில் தாய்லாந்தின் சாதகமான போக்கும் பேச்சுக்களுக்கு இடமளிப்பதற்கான அதன் ஆர்வமுமே அரசு- புலிகள் நேரடிப் பேச்சுவார்த்தைக்கான இடமாக தாய்லாந்தை தெரிவுசெய்ய காரணமாக இருந்ததென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந.5)

## யஸீர் அரபாத்தின் பணிமனை மீது இஸ்ரேலிய இராணுவம் திடீர் தாக்குதல்

### அரபாத் மயிரிழையில் உயிர் தப்பினார்

(ஜெரிசலேம்)

பலஸ்தீனத்தின் மேற்குக் கரைநகரான ரமழாவில் அமைந்துள்ள பலஸ்தீன தலைவா யஸீர் அரபாத்தின் பணிமனை மீது ஸ்ரேலிய இராணுவம் மிகவும் மோசமான தாக்குதல்களை நடத்தியுள்ளது.

நேற்றுக் காலை அரபாத்தின் பணிமனை அமைந்துள்ள வளாகத்தின் சுற்று மதில்களை இடித்துத் தள்ளியவாறு பெருமளவு டாங்கிகள், சகிதம் உள்நுழைந்த ஸ்ரேலியப் படையினர் அரபாத்தின் மூன்றுமாடிக் கட்டிடம் மீது கடுமையான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இவ்வாறு ஏவப்பட்ட ஷெல்கள் அரபாத்தின் பணிமனை மீது விழுந்து வெடித்தது. இதன் போது அங்கிருந்த அரபாத் மயிரிழையில் உயிர் தப்பினார். இந்தத் தாக்குதல்களில் நாலு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இருபதுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் ஸ்ரேலியப் படைவீரர் ஒருவரும் கொல்லப்பட்டார். கடந்த புதன்கிழமை ஸ்ரேலில் பலஸ்தீன தீவிரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைத்

(8ம் பக்கம் பார்க்க)

## நோர்வேயில் தூதரகம்

(கொழும்பு)

நோர்வேக்கான இலங்கைத் தூதரகம் தரம் உயர்த்தப்படவுள்ளது.

தற்பொழுது ஒஸ்லோவில் இலங்கையின் நலன் காக்கும் பிரிவு ஒன்றே செயற்பட்டு வருகிறது.

இதனைத் தரமுயர்த்தி நிரந்தர தூதுவர் ஒருவரையும் நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ)

## க.பொ.த சாதாரண பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரண பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று கல்வித் திணைக்களத்தினால் இணையத்தளம் மூலம் வெளியிடப்பட்டது.

நேற்றைய தினம் யாழ் இந்து

(8ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### தேவை

யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட உள்ள ஆடைத் தொழில் சாலைக்கு துணிவெட்டுபவர், தைப்பவர், பூவேலை செய்பவர் தேவை. அனுபவம் வாய்ந்தவர் பயிலுநர்கள் தங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி விளம்பர இல-241,மே/பா,வலம்புரி.
(சி-3757)

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து நியாயவிலையில் 24மணி நேரமும் பெற்றுக்கொள்ளலாம். 61 இராமநாதன் வீதி (மிலேனியம் பாருக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4874)

### கும்பாபிஷேகம்

(ஊர்காவற்றுறை)

வேலணைசேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகா வித்தியாலயத்தில் உள்ள சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜர் தேவஸ்தானமஹா கும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது. (உ-75)

## இராசிபலன்

30.3.2002
(பங்குனி 16,சனி)
துதியை மு.இ8.20வரை
சித்திரை பி.ப2 48வரை
ராகுகாலம்-9.15-12.13
நல்லநேரம்-6.13-7.43

**மேடம்**
காரியம்கைகூடும்,அபூர்வ சந்திப்பு,கௌரவம், வாகன வசதி

**இடபம்**
வாக்குமேன்மை, முயற்சி பலிதம்,மனமகிழ்ச்சி, உடல் நலம்

**மிதுனம்**
கௌரவக்குறைவு, காரிய தாமதம்,தொழில் நன்மை, புத்திரரால் கவலை

**கடகம்**
உடல்நலக்குறைவு,நிலை மாற்றம்,அபகீர்த்தி,முயற்சி தாமதம்

**சிங்கம்**
குடும்பமகிழ்ச்சி,காரியநன்மை, நண்பர்கள சந்திப்பு, வாக்குமேன்மை.

**கன்னி**
மாதர்நட்பு, தனவிரயம், காரியதாமதம், ரோகபயம்

**துலாம்**
அரசஆதரவு,உறவினர் சந்திப்பு,நல்லமுயற்சி,போசன சுகம்

**விருச்சிகம்**
காரியஅலைச்சல்' உணர்ச்சி வசப்படல்,சுபசெலவு, பிரயாணம்

**தனுசு**
குடும்பமகிழ்ச்சி, கீர்த்தி காரியசித்தி, பொருள்சேர்க்கை

**மகரம்**
செய்தொழில்சிறப்பு, தூர தேசச்செய்தி, முயற்சிகை கூடும்,அரசநன்மை

**கும்பம்**
சகோதரர்உதவி,காரியம் கைகூடும்,பிரயாணம், உடல் சோர்வு

**மீனம்**
காரியதடங்கல், உடல் வியாதி, தேவையற்ற பிரச்சினை,பிரயாணபயம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# அரசும் விடுதலைப் புலிகளும் சமாதான உணர்வுடன் பேச்சில் ஈடுபடவேண்டும்

## வெளிவிவகார ராஜதந்திரி கிறிஸ்தோபர் வேண்டுகோள்

1980ம்ஆண்டு பிரித்தானியா அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சராக இருந்தசமயம் யுத்தத்திற்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் தாங்கிய ஒருபோர் உலங்குவானூர்தியில் பின்புறம்ஏறி அமர்ந்து கொண்டு யாழ்ப்பாணம் சென்ற பயணம்எனக்குஇன்று போல் ஞாபகத்தில் இருக்கின்றது 'அந்நாட்களில் இலங்கைக்குவரும் சந்தர்ப்பங்களில் என்இதயத்தில் மகிழ்ச்சியைப் போல் துக்கமும் குடிகொண்டது.

பலவிதமான சிறப்புக்கள் பொருந்திய ஒரு சுதந்திரத் தீவிற்கு பயணமாகும் ஆனந்தப் பெருக்கு இருந்தபோதும் இலங்கையின் வடக்குப்பகுதி யுத்தநெருப்பாகி இலங்கையின் முன்னேற்றத்தைதடுத்து பின்நோக்கி நகரவைத்தமை கவலையை அளித்தது. போர்த் தீப்பிழம்பு இலட்சக்கணக்கான மக்களை வாட்டி வருத்தியது இதனால் நான் மிகவும் கவலைஅடைந்தேன்

**புரிந்துணர்வு ஒப்பந்தம் மகிழ்ச்சியைதருகிறது**

இன்றுஏற்பட்டிருக்கும் இந்தபுரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டில்லா மகிழ்ச்சியை தருகின்றது நிரந்தரப்போர் நிறுத்தம் ஏற்படுவதால் இந்த உடன்படிக்கை பல இடையூறுகளையும் கடந்து நீடித்துநின்று நல்ல பயனைத் தரும் என்பது எனதுநம்பிக்கையாகும். இவ் விடயத்தில் சமாதானப் பயணத்தில் கைகொடுத்து பாடுபட்டு வரும் நோர்வே அரசைப் பாராட்டுகின்றேன்.

ஐரோப்பிய ஒன்றியம் பல வழிகளிலும் தொடர்ந்தும் சமாதானத்தை முன்னெடுக்கும்படி இருபகுதியினருக்கும் அழைப்பு விடுக்கின்றது இருசாராரும் பேச்வார்த்தை மேசைக்கு வரும்போது, நம் நாட்டில் நிரந்தர சமாதானத்தைநிலை நாட்டும் அதி உயர்எண்ணத்துடனேயே வர வேண்டும். மேலும் நீண்டகால யுத்தம் காரணமாக ஒருவர்மீது மற்றொருவர் கொண்டுள்ள அவநம்பிக்கைகள் நீக்கப்பட வேண்டும், இது நல்லஅணுகுமுறையாலேயே சாத்தியமாகும். சமாதானப்பயணம்இலகுவானதல்ல என்றாலும்அர்ப்பணிப்புடனும் சிறந்தசெயல்திட்டத்தின் ஊடாகவும் சமாதானம் வெல்லப்பட வேண்டும்.

புலிகள் ஜனநாயகவழியில்

நாம் இப்பொழுதுவாழ்வது

> அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே உருவாகியுள்ள சமாதான உறவு, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவற்றை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.
>
> இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டுவிவகார இராஜதந்திரி கிறிஸ்தோபர் பெட்டன் வெளியிட்ட கருத்தின் தொகுப்பு பிரசுரமாகிறது.

ஒரு சர்வதேச வியூகத்தின மத்தியிலாகும் இந்தவியூகம் கடந்த டிசம்பர்மாதம் 11ம் திகதியில் இருந்து புதிய வடிவம் எடுத்துள்ளது பயங்கரவாத ஒழிப்பு என்றமுனைப்பு சர்வதேச ரீதியில் ஐ.நா சபைஊடாக முன்னெடுக்கப்படுவது இலங்கையையும் வெகுவாகப்பாதிக்கும்.

பயங்கரவாத இயக்கமென சிலநாடுகளில் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கும் அரசியல் அமைப்பாக தம்மை மாற்றிக் கொண்டு ஜனநாயக எல்லைக்குள் நுழைகின்றனர் இவ் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக கணிக்க உதவியகாரணிகளை தடைசெய்த நாடுகள் இனிமேல்அதனை புறந்தள்ள வேண்டும். இதற்கு இந்தப் போர்நிறுத்தம் நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுக்கின்றது.

இவ் உடன்படிக்கையில்அர்த்தம் சாதாரண பிரஜைகளை இம்சைவதை செய்யாதிருக்க வழி செய்கின்றது தமிழர் சிங்களவர் முஸ்லிம் என்ற வேறுபாடின்றி மனித உரிமைகள் பேணப்பட இந்த உடன்படிக்கைதுணை செய்கிறது.

இந்த உடன்படிக்கையின் முக்கிய பங்குதாரர்களாக தமிழ் மக்கள் இருக்கப் போகின்றார்கள்என்று நான் நினைக்கின்றேன் அவர்களுக்கு தேவைப்படுவது அரசியல் கலைகலாசார பண்பாடு சமூக உரிமைகளை பேணிப் பாதுகாப்பதும் சமாதானமாக கௌரவத்துடன் வாழ்வதுமாகும் மேலும் சீரழிந்து போன வாழ்க்கையை புனரமைப்பதும் தமது இனத்துவத்தை காப்பதுமாகும்.

**அரசியல் கட்சிகள் உதவ வேண்டும்**

சமாதானத்தின்முன்னோடி நடவடிக்கையாக தெற்கே செல்லும் பாதை தடை அகற்றப்படுகின்றது.

வடக்கே செல்வதற்கான பாதை திறக்கப்படுன்றது மக்கள் அங்கும் இங்கும் செல்லமுடியாமல் இருந்த தடைகள் நீக்கப்படுகின்றன வடக்கிற்கான பொருளாதார தடை நீக்கப்பட்டுள்ளது. இதுபோன்றபல நல்ல எடுத்துக்காட்டான சமரசசன்மார்க்க ஆக்க முயற்சிகள் இனிமேல் மென்மேலும் இடம் பெறும் என நான் நம்புகின்றேன்.

சமாதான செயல்திட்டங்களை முன்னெடுத்து செல்ல சகல அரசியல் கட்சிகளும் பங்களிப்பு செய்ய வேண்டும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஸ்கண்டிநேவிய நாடுகள் ஒப்பந்தம் முறிந்து போகாமல் இருக்க மிக்க அவதானத்துடன் செயல்படும்.

மக்கள் சந்தேகம் பயப்பிராந்திகள்இன்றி வாழ்வதே மிகமுக்கியவிடயமாகும். இது சுதந்திரமான வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட விடயமாகும். இனங்களிடையே சமத்துவம் என்ற நோக்கில் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட தரப்பினர் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும். சுதந்திரமான வாழ்வுக்கு அவர்களின் அபிலாசைகளுக்கு இடமளிக்க வேண்டும்.

**அமைதிப் பூங்காவாக மாறவேண்டும்**

எதிர்காலத்தில் இலங்கை அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டும். சமாதானம் நிரம்ப வேண்டும். என்ற இலங்கை மக்களின் பெருவிருப்பத்திலேயே நாட்டின் எதிர்காலம் இருக்கின்றது. வெளிநாட்டவரால் கட்டாயப்படுத்தி இதனை செய்ய முடியாது, சர்வதேசப் பிரசைகளால் செய்யக் கூடியது யாதெனில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் காலங்களில் அதற்கு ஒத்துழைப்புவழங்கி இச் சமாதான முயற்சிகளின் ஊடே எந்த விதமான ஓர் அரசியல் தீர்வு எட்டப்பட்டாலும் அதனை சக்திவாய்ந்த ஒன்றாக நிலை நாட்ட உறுதி எடுப்பதாகும்

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். என்பதையே ஐரோப்பிய சமூகம் வலியுறுத்தி வருகிறது இதன்காரணமாக மத்தியஸ்தம் வசிக்கும் நோர்வே அரசிற்கு தொடர்ந்தும் பரிபூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம். போதிய அடிப்படை உதவிகளை இலங்கையரசிற்கு வழங்கியுள்ளோம்.

சமாதானத்தை தோற்றுவித்து தொடர்ந்து பேணப்படும் பட்சத்தில் இந்த யுத்தத்தினால் சீரழிந்துபோன வடக்கு கிழக்குப் பிரதேசங்களை மீண்டும் புனரமைத்து கொடுக்க தயாராக இருக்கின்றோம். இலங்கையின் தேசிய பொருளாதாரத்தை கட்டி எழுப்பவும் இயன்ற அளவு உதவுவோம்.

தொழில் வாய்ப்புக்களையும் சகல சௌபாக்கியங்களையும் இத்தீவில் தோற்றுவிக்கப் போகும் சமாதானம் இங்கு மலரவேண்டும் என நான் ஆசைப்படுகிறேன்.

தொகுப்பு:
**கே. கார்த்திகேசு**

## தந்தை செல்வாவின் 104வது பிறந்தநாள்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 104 வது பிறந்தநாள் நினைவு நிகழ்ச்சிகள் நாளை மு.ப 9.00 மணிக்கு யாழ். நகரில் உள்ள தந்தை செல்வாநினைவிடத்தில் இடம்பெறவுள்ளது (உ)

## அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

பாடசாலைஅதிபர் சி.சிவச்செல்வம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வடமராட்சி, கல்விப்பணிப்பாளர் தி. செல்வரட்ணம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைப்பார் (இ-5)

## வணிகர் கழகத்தில் கலந்துரையாடல்

இலங்கைத் தேசிய வர்த்தகசங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரபல வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் 42 பேர் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இக் குழுவினர் அன்றைய தினம் முற்பகல் 10.00 மணியளவில் யாழ் வணிகர்கழகப் பணிமனையில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்குபற்றுவர்.

இக் கலந்துரையாடலில் யாழ் குடாநாட்டு பொருட்களுக்கான சந்தைவாய்ப்பை ஏற்படுத்துதல், தென்பகுதிப் பொருட்களை குடாநாட்டில் சந்தைப்படுத்தல் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தல் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளதால் யாழ் வர்த்தகர்களை இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(இ-5-19)

# அரபாத்தின் அலுவலகத்தினுள் இஸ்ரேல் படை நுழைய முயற்சி

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய புல்டோசர்கள் பலஸ்தீனத்தலைவர் யசீர் அரபாத்தின் தலைமை அலுவலக முன் வாசல் சுவரை நேற்றுக்காலை இடித்துத் தள்ளியுள்ளன.

20 ற்கும் மேற்பட்ட இஸ்ரேலிய தாங்கிகள் சுற்றிவளைத்து அரபாத்தின் அலுவலகத்தை தாக்கியதில் அவரின் பிரத்தியேக காவலாளர்கள் மூவர் காயமடைந்துள்ளதுடன் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

சுமார் 10 மீற்றர் தூரத்திலுள்ள பலஸ்தீன உள்துறை அமைச்சின் கட்டடத்தை இஸ்ரேலிய படைவீரர்கள் ஆக்ரமித்துள்ளதுடன் றம்புள்ள நகரத்தின் மேலாக இஸ்ரேலிய ஹெலி கொப்டர்கள் பறந்த வண்ணம் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இதே வேளை, இஸ்ரேலிய பிரதமர் ஏரியல்ஷரோன் பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தை ஒரு விரோதி என்றுகுறிப்பிட்டுள்ளார். இது பலஸ்தீன மக்கள் மீது யுத்தப் பிரகடனம் செய்வதை எடுத்துக் காட்டுகிறது என்று அரபாத்தின் உயர்மட்ட உதவியாளர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய அமைச்சர் ஒருவர் அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் யசீர் அரபாத்தை தனிமைப் படுத்துவதுதான் இஸ்ரேலின் நோக்கம் என்று தெரிவித்திருக்கிறார். யசீர் அரபாத் நேற்று முன்தினம் நள்ளிரவில் யுத்த நிறுத்த பிரகடனம் செய்வதாக அறிவித்ததை அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது. (உ-9)

## சுவரொட்டி

(மந்திகை)

தென்மராட்சி பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து இப்பகுதியில் மிதிவெடிவிழிப்புணர்வை ஏற்படுத்தும் சுவரொட்டிகள் யுனிசெவ் நிறுவனத்தினால் ஒட்டப்பட்டுள்ளன. (உ-23

# பரதக்கலையின் நுணுக்கங்களை தத்ரூபமாக வெளிப்படுத்தியதான நாட்டிய இசை விருந்து

சமூகப்பணிகள் பலவற்றில் ஈடுபட்டு வரும் மானிப்பாய் அரிமாக்கழகத்தினர் அண்மையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அரங்கேற்றத்தில் 'நாட்டிய இசை விருந்து' பற்றிய மஹா வித்துவானின்விமர்சனக் கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.

ஆ - ர்

ஸ்ரீமதிகிருஷசாந்தி இரவீந்திரா அவர்களின் நட்டு வாங்கத்திலும் நாட்டிய அமைப்பிலும், நிர்வாகத்திலும், அவர்தம் சிஷ்யைகளால், இந்த நாட்டிய நிகழ்ச்சி அரங்கேறியது. யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக நாட்டிய இசைத் துறைகளில் பயின்ற, பயில்கின்ற தரமான இளங்கலைஞர்கள் இவர்கள் சங்கீத பூஷணம் குமாரசாமி பாட்டு, லயஞான வாரிதி எஸ். மகேந்திரன் மிருதங்கம், சங்கீத வித்துவான் செல்வி. பாக்கியலஷ்மி நடராஜா வயலின், செல்வன் தவநாதன் றொபேட்தபேலா ஆகிய கலைஞர்கள் அணிசெய்திருந்தார்கள். இக்கலையரங்கில் முதல் நிகழ்வாக ஸ்துதி நிகழ்ச்சி இடம் பெற்றது. கணபதி, சரஸ்வதி, சிவன், சக்தி, காளி, கண்ணன், ஸ்துதிகளாக அமைந்திருந்த இந்த ஆடல் நிகழ்ச்சி ராகமாலிகை இசையமைப்பைப் பெற்றிருந்தது.

சாஸ்திரரோக்தமானபாணி

பரதநாட்டிய சம்பிரதாயத்துடன் அமைந்த இந்நிகழ்ச்சியில் கதக், கதகளிமணிப்புரி, குச்சுப்பிடி, மோகினி ஆட்டம் போன்ற சாஸ்திரோக்தமான பாணிகளையும் ஒவ்வொரு தெய்வங்களுக்கும் ஸ்துதி யாக அந்தந்தப் பாணிகளை வெகுலாவகமாகக் கையாண்டு அந்தந்தப் பாணிகளுக்கேற்ற இசையமைப்பினையும் கையாண்டு அதற்கேற்றவாறு நாட்டிய அமைப்பை பெற்றிருந்தது. ஜதி சொற்கட்டு அறுதிக்கான அடவுக் கோர்வைகள் அந்தந்த நாட்டிய பாணிகளுக்கேற்றவாறு அமைந்திருந்த பாங்கு, பழைய சம்பிரதயாத்தைத் தழுவிய ஓர் புதுமையானதும். தெய்வீகமானதும் பக்திபூர்வமானதும், உயர்ந்த தரமானநிகழ்ச்சியாக அமைந்தது.

நவரஸபாவம்

இந் நிகழ்ச்சி நாட்டிய உலகில் ஒருசாதனையாகும். பாரத நாட்டு நடன வகைகளுக்கேற்ப பக்தி பூர்வமான இசையமைப்பையும் வியக்க வைக்கும் நாட்டிய அமைப்பினையும் அந்தந்தப் பாணிகளில் அமைத்து அடவுக்கோர்வைகளூடே நவரஸங்களையும் பாவ பூர்வமாக அமைத்து அப்பழுக்கில்லாதவாறு கற்பித்து நட்டுவாங்கமும் திறம்பெறச் செய்து தமது குமாரி துஷ்யந்தியின் கலை வண்ணத்தையும்ஊட்டியகுரு, திருமதி கிருஷாந்தி இரவீந்திரா அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

> பாரதத்தில் தான் பரதம் பிறந்தது. அங்கு தான் அக்கலை வளர்ந்தது. அந்த பரதமே வியக்கும் வகையில் எங்கள் தமிழீழத்தில் யாழ். மண்ணில் அதி உன்னத நிலையில் பரதக்கலை சாஸ்த்திரோக்தமாகச் சம்பிரதாய நெறிப்பிரகாரம், வளர்ந்தோங்கிக் கலை மணம் வீசக் கமழ்ந்து மணக்கிறது. தமிழீழம் பரதக்கலைப் பூங்காவாகப் பூஞ்சோலையாக வண்ணவண்ண இளங்கலை மலர்களை மணம் வீசிக்கமழும் கலைச் சோலையாக விளங்குகிறது.

எடுத்த எடுப்பிலேயே நாட்டிய பாவம் தொனிக்கும் மிருதங்க இசையில் பெருகூட்டிய மிருதங்க லயஞான வாரிதி மகேந்திரன் தனது மிருதங்க வித்துவத்தினால் ரசிகரின் உள்ளங்களில் அழியாதஇடம் பெற்று விட்டார்.

வயலின் இசையின் அமைவு

வயலின் இசைத்த சங்கீத வித்துவான் செல்வி பாக்கிய லக்ஷ்மிநடராஜாவின் வயலின் இசைஇனிமையாகவும் மென்மையாகவும்நிதானமாகவும், நாட்டியப்பாடலின்பாவங்கள் பிரதி பலிக்கக் கூடியதாகவும் பாடகரோடு அனுசரணையாகவும் அமைந்திருந்தது. இவரது வயலின் இசையின்தொனியின் இனிமை இவரது குருவான ஸ்ரீ அனந்தராமனின் வயலின் இசைப்பாணியை நினைவூட்டின.

றொபேட் தவநாதன் வயதில் இளைஞரானாலும்கலை முதிர்ச்சியுள்ளகலைஞர் அவரது மதுரமான குரல் இந்த நாட்டிய நிகழ்ச்சியைப்பிரகாசிக்கவைத்ததுடன், 'கீபோட்'

## திறனாய்வுக் களம்

என்னும் வாத்தியத்தையும் திறம்பட வாசித்தபடி இந்த நாட்டிய நிகழ்ச்சிக்கு ஜீவநாதம் கொடுத்திருந்தார்.

தபேலா இசைத்த செல்வன் ம. லோகேந்திரன் வளர்ந்து வரும் இளம் கலைஞர், அடவுக் கோர்வைகளுக்கும் நாட்டியபாவம் கொடுத்து தபேலா வாசிக்கும் கலைத்திறன் கொண்ட இளங்கலைஞர் இவர்.

வரவேற்பு நடனம்

தேவஸ்துதியான ஆடல் முடிந்தவுடன், வரவேற்பு நடனம் நிகழ்ந்தது. வருக, வருக என அன்பாகப் பண்பாக இன் முகத்துடன் வருகைதந்த ரசிகப் பெருமக்களை வரவேற்கும் பாணியிலான தமிழ்ப் பண்பாடு நிறைந்த உற்சாகமான வரவேற்பு நடனம் நான்கு நங்கையரால் ஆடப் பெற்றது.

இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றஇளங்கலைஞர்களான திருமதி அநுஷாந்தி சுகிர்தராஜ், செல்விகள் சியாமளா பாலசிங்கம், தர்சினி அபராஜா, டிலானி ஆகியோர் பாராட்டுக் குரியவர்கள்.

அடுத்த நிகழ்ச்சியாக 'பொற்பதம் தூக்கியே ஆனந்த தாண்டவம்சிற்சபையில் அய்யன்ஆடினான்' என்ற பாடலுக்கு குமாரி துஷ்யந்தி ஆடிய காட்சி சிதம்பரத்திலே நடராஜர் தரிசனத்தை மானசீகமாக காண வைத்தது.

அடுத்த நிகழ்ச்சியான 'பாவரஸாநந்தம்' எனும் பரதக்கலையின் தத்து வார்த்தங்களையும்கோட்பாடுகளையும் விளக்கிக் காட்டும் நிகழ்ச்சியில் ஸ்ரீமதி அனுஷாந்தி, குமாரி ஆனந்த ஜோதியும் பங்கு பற்றினர்.

அபிநயச் சிறப்பு

'சின்னஞ்சிறு கிளியே' என்னும் பாரதியாரின் அபிநயப் பாடல் இடம் பெற்றது. துஷ்யந்தி தனது முக பாவத்தின் மூலம் நிலாக்காட்டி அன்னமூட்டுவது, ஆனை ஏற்றி ஆடுவது, குழந்தை கண்ணமாவின் குறும்புகள் மற்றும் அடாவடித்தனம் ஆகிய வற்றுடன் நாய் குழந்தையைத் தேற்றும் அன்பானதந்திரங்கள் அபிநயங்கள் மூலம் லாவண்யமாகவும் ஆடி ரசிகர்களுடைய உள்ளங்களை மெய் சிலிர்க்க வைத்து விட்டார்.

அடுத்த நிகழ்வாக குமாரி சுதாஜினி பொன்னம்பலத்தின் மயில் நடனம் இடம் பெற்றது. விறுவிறுப்பாக மயில் நடனம் ஆடி முடிந்ததும் ரசிகர்கள் ஏகோபித்த தொனியில் கரகோஷம் செய்தனர். அடுத்துராதாகிருஷ்ண நடனம் இடம்பெற்றது. பிருந்தாவனத்திற்கேஎம்மை அழைத்துச் சென்றது இந்தச் சிருங்கார நடனம். தேர்ந்தெடுத்த பாடல்களும் அபிநயங்களும் சிருங்கார ரஸத்தையும் பக்தியையும் புலப்படுத்தக் கூடிய வகையில் தெரிவு செய்துள்ளமை இந் நிகழ்ச்சியை மெரு கூட்டின.

## மஹாவித்துவான்

## நாளை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்ப பூங்காவில் எம்.எஸ். ஒபிஸ் பாடநெறியை மேற்கொண்ட முதலாவது பிரிவினர்க்கான பரீட்சை நாளை மு.ப.10.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## சலனசித்திரம் அங்குரார்ப்பணம்

(மந்திகை)

தென்மராட்சி பிரதேச சலன சித்திர அமைப்பின் பிரதேச கிளை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அமைப்பில் பொதுச்செயலாளராக சு. சுவர்ணாவும், நிதிச்செயலாளராக கி. விஜயலதாவும், நிர்வாக செயலாளராக க. ஸ்ரீதேவியும், கல்விச் செயலாளராக க. மச்சகேந்திரகுமாரியும், பிரசார செயலாளராக கிறிஸ்தோபர் ஜோன்சனும், தொழில் செயலாளராக க. சத்தியசீலனும், மகளிர் விவகார செயலாளராக இ. கமலமதியும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-23)

## ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் பொன்விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி நடத்தப்பட்ட ஆண்களுக்கான 5மைல் ஓட்டப் போட்டியில்,

முதலாவது இடத்தை த. ஜெயந்தனும், இரண்டாவது இடத்தை த. துஷனும், மூன்றாவது இடத்தை ஜெ ஜெயதாஸும் பெற்றுள்ளனர். (உ- 19)

## புதிய தலைவர்

(கோப்பாய்)

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோப்பாய்க் கிளைத் தலைவர் ஓய்வு பெற்றதை அடுத்து கோப்பாய் மகா வித்தியாலய ஆசிரியர் எம். சுகுமார் அவ்விடத்திற்கு நிர்வாக சபையால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ-79)

## 50 மைல் மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் பொன்விழா கொண்டாட்டத்தை ஒட்டிய 50 மைல் மரதன் ஓட்டப் போட்டி நாளை காலை 7.00 மணிக்கு யாழ். மாநகர சபை முன்றலில் ஆரம்பமாகவுள்ளது. (உ-9)

# சமாதான முயற்சிகளுக்கு றோட்டறிக் கழகம் ஆதரவு

(கொழும்பு)

அரசு-புலிகளின் சமாதான முயற்சிகளுக்கு றோட்டறிக் கழகம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறிந்து அக்கழகம் அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில், இரு தசாப்தங்களுக்கு மேலாக யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிம்மதியளிக்க வேண்டும்.

இந்த அவலம் இன்றைய சந்ததிக்கு மட்டுமன்றி எதிர்காலச் சந்ததிக்கும் ஏற்படக் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# தேசிய அரசை ஆதரிப்போர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை?

(கொழும்பு)

தேசிய அரசை ஆதரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் கடந்த செவ்வாயன்று இரவு ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் இடம்பெற்ற போது மைத்திரிபால ஸ்ரீசேன எம்.பி.இதனை வலியுறுத்தினார்.

ஸ்ரீ.சு.கட்சிக்குள் இருந்து கொண்டே தேசிய அரசை ஆதரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் கண்டித்த போதிலும்,

அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என ஜனாதிபதி சந்திரிகா கேட்டுக்கொண்டார். (உ)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

முடமாவடியில் அமைந்துள்ள பூங்கனிச் சோலையின் கண்காட்சியும் விற்பனையும் நேற்று தொடக்கம் காலை 8. 00 மணி முதல் இரவு 10 மணிவரை நடைபெற்று வருகிறது. (உ-3)

# முஸ்லிம்களின் உரிமைகளை வலியுறுத்தி ஏப்ரலில் பிரார்த்தனை

## முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம்களின் உரிமைகளை வலியுறுத்தி எதிர்வரும்ஏப்ரல் 16 ஆம் திகதி ஒலுவிலவில் பிரார்த்தனைக்கூட்டம்ஒன்று இடம்பெறவுள்ளது.

முஸ்லிம்காங்கிரஸ் ஏற்பாட்டில் இடம்பெறும்இப்பிரார்த்தனைக் கூட்டத்தில் ஏனைய முஸ்லிம்கட்சிப்பிரமுகர்களையும் பங்குகொள்ளவைக்கும் முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன.

வடக்கு - கிழக்கை தமிழ் பேசும் மக்களின் தாயகமாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்பது உட்பட ஆறு அம்சக் கோரிக்கைகள்இதில்வலியுறுத்தப்படவுள்ளன. (உ)

# குற்றச் சாட்டை நிரூபிக்க ஆதாரம் இல்லாதோர் வழக்குகள் வாபஸ்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு, குற்றச்சாட்டை நிரூபிக்க ஆதாரமில்லாதவர்களே விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

ஏனையோர் விடுதலைசெய்யப்பட மாட்டார்கள் என சட்டமா அதிபர்கமலசபேசன் தெரிவித்துள்ளார்.

5 ஆம் சரத்தின் 2ஆவதுஉபசரத்தின் கீழ்மேற் கூறப்பட்டவர்கள்மீதான வழக்குகள் வாபஸ் பெறப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

## குளங்கள் புனரமைக்க 12கோடி தேவை

வவுனியா, மன்னார், மாவட்டங்களிலுள்ள விவசாய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைக்க 12கோடி 40இலட்சம் ரூபா தேவையென கணிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் நடத்தப்படும் முத்தமிழ் விழா, இன்று பி.ப 1.30 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியிலும்,

நாளை பி.ப 1.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுகளில் மேலதிக அரசாகங்க அதிபர் து. வைத்திலிங்கம், இலக்கியகலாநிதி சொக்கலிங்கம் ஆகியோர்பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## சி. ஐ. ஏ. இன் உதவியுடன் பொலிஸார் அதிரடி நடவடிக்கை

# 30 தீவிரவாதிகள்பாகிஸ்தானில்கைது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் மேற்குக் கரை நகர்ஒன்றில் தீவிரதேடுதல்களை நடத்திய பொலிஸார் 30 இஸ்லாமிய தீவிரவாதிகளைக் கைதுசெய்துள்ளனர்.

இந்தக் சைது நடவடிக்கையின்போது தீவிரவாதிசளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதுடன் பொலிஸார் ஒருவர் உட்பட மூன்றுபேர் காயமடைந்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட தீவிரவாதிகள் பற்றிய தகவல்களை வெளியிட பாகிஸ்தான்பொலிஸார் மறுத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பிவந்து பாகிஸ்தானில் தங்கியிருந்த அல்கெய்டா போராளிகளே கைதுசெய்யப்பட்டதாகவும்,

இந்தத் தேடுதல் நடவடிக்கையானது அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையினரின் அதிகாரிகளது உதவியுடன் நடத்தப்பட்டதாகவும் பாகிஸ்தானிய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாகிஸ்தானில் கடந்தவாரம் கிறிஸ்தவ தேவாலயமொன்றில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் அமெரிக்க அதிகாரியும் அவரதுமனைவி பிள்ளைகளும்கொல்லப்பட்டது தெரிந்ததே,

இந்தச் சம்பவம் தொடர்பாக புலன்விசாரணைகளை மேற்கொண்டுவரும் அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையினர் தற்போதுபாகிஸ்தானில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## ஒரே களத்தில் மீண்டும் இந்திய - பாக். அணிகள்

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் மீண்டும் கிரிக்கெட்போட்டிகளை நடத்துவது தொடர்பாக இவ்வாரம் பேச்சுவார்த்தை நடந்தப்படவுள்ளதாக பாகிஸ்தானிய கிரிக்கெட் சபையின் தலைவர் பாக்கிய சிபா தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்குமிடையில் நிலவி வந்த பதற்ற நிலமை காரணமாக கிரிக்கெட்போட்டியில் ஈடுபடுவதை இந்தியா இடையுறுத்தியுள்ளது.

எனினும் தற்போது 2 நாடுகளிற்கிடையிலும் கிரிக்கெட் போட்டியைத் தொடர இந்திய விளையாட்டமைச்சர் உமாபாரதி அங்கீகாரம்வழங்கியுள்ளார்.

கடந்த வருடம் பாகிஸ்தானிற்கு மேற்கொள்ள இருந்த இரு கிரிக்கெட்சுற்றுப்பயணங்களை இந்தியா ரத்து செய்திருந்ததும் 2000 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பின் 2 நாடுகளும் ஒன்றை ஒன்று எதிர்த்தாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

## விமானியின் குறிப்புகள் 350 ஆயிரம் டொலர்

(டோக்கியோ)

ஜப்பானில் ஹிரோஷிமா நகரம் மீது முதல் அணுகுண்டை வீசிய விமானத்தின் துணை விமானி எழுதியகுறிப்புக்கள் 350 ஆயிரம் டொலர் பெறுமதிக்கு விற்பனைசெய்யப்பட்டுள்ளது.

றொபேர்ட் லூயிஸ் என்ற இத்துணை விமானி, தன்விமானத்திலிருந்து அணுகுண்டு வீசிய நிகழ்வையும் அதன்பின்னர் அவர் கண்ட காட்சிகளையும் தன் கைப்பட தத்ரூபமாக எழுதியிருந்தார்.

முதல்தர தகவல்களைத் தரும்இந்தக்குறிப்புகள்நேற்று நியூயோர்க் நகரில் நடத்தப்பட்ட விற்பனையிலேயே விற்கப்பட்டுள்ளது. (செ)

## விலகியிருக்க தீர்மானம்

(புதுடில்லி)

தற்போதுள்ள நிலையில் இந்துக்கோ போக்கிலிருந்து விலகியிருப்பதே நல்லது என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

இந்து அடிப்படை வாதிகளின் அண்மைக்கால நடவடிக்கை குறித்து அதிருப்தி தெரிவித்த பிரதமர் இந்துக்கோ என்பது தானாகவே உருவாகும் ஒரு வாக்கிய முறையென்றும் அதனை மதத்துடன் இணைக்கக் கூடாதென்றும் தெரிவித்தார். (து)

## மத்திய கிழக்கில் நிரந்தர யுத்த நிறுத்தம்

### கோபி அனான் கோரிக்கை

(ரெல்அவிவ்)

மத்திய கிழக்கில் உடனடி யுத்த நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் அமைச்சின் செயலாளர் நாயகம் கோபிஅனான் கோரியுள்ளார்.

இஸ்ரேலில் இடம்பெற்ற பலஸ்தீன தற்கொலைப் போராளியின் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டதை அடுத்தே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனையும், பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தையும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இவ்வாறு கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## இந்தியா-சீனா இடையே நேரடி விமான சேவை

(புதுடில்லி)

அதிக சனத்தொகையை கொண்ட நாடுகளான இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையிலான முதலாவது வர்த்தக நோக்கிலான நேரடி விமான சேவை நேற்று முன்தினம் பீஜிங்கிலிருந்து புதுடில்லிக்குஆரம்பமாகியுள்ளது.

இரண்டு நாடுகளிற்குமிடையிலான உறவுகளை விருத்தி செய்து கொள்வதில் இந்திய விமானப் பயணம் முக்கியத்துவம் பெறுவதாக சீன வெளிநாட்டமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, இம்மாத இறுதியில் இருந்து சங்காயில் இருந்து பீஜிங் ஊடாக புதுடில்லிக்கு வாரம் இருமுறை விமான சேவையை நடத்தப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## 3 வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி

### வெற்றிதோல்வி இன்றி முடிவு

(ஹராரே)

அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

தென்னாபிரிக்கா 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 259 ஓட்டங்களைப்பெற்றது. ஜென்சி றோட் 83 ஓட்டங்களையும், யக்கலிஸ் 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 259 ஓட்டங்களை பெற்றது. மகற்றிஹோடன் 78 ஓட்டங்களையும் ஜிம்மி 43 ஓட்டங்களையும் பெற்றனர். (உ-9)

## லண்டன் பத்திரிகைக்கு ஒஸாமா மின் அஞ்சல்

(லண்டன்)

அமெரிக்காவினால் மிகத் தீவிரமாகத்தேடப்பட்டுவரும் அல்செய்டா இயக்கத் தலைவர் ஒஸாமா பின்லேடனிடமிருந்து தமக்கு மின் அஞ்சல் ஒன்று கிடைத்திருப்பதாக லண்டனிலிருந்து வெளியாகும் 'அல்அராபிக்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இந்த மின்னஞ்சலில் சவுதி அரேபிய இளவரசரது மேற்காசிய விஜயத்தைக் கண்டித்தும் பலஸ்தீனர்கள் நடத்தும் தற்கொலைத் தாக்குதல்களைப் பாராட்டியும் எழுதப்பட்டுள்ளதாகவும்,

இந்த அஞ்சலில் எழுதப்பட்டுள்ள மொழி நடையைப் பார்க்கும் போது அதை ஒஸாமாபின்லேடனேஎழுதியிருப்பார் என்பதை ஊகிக்க முடிவதாகவும் அப்பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)


### வலிகாமம் கிழக்கு பிரதேசசெயலக கலாசாரப் பேரவை நடத்தும்

## முத்தமிழ் விழா - 2002

### இரு நாள் நிகழ்வுகள்

தலைவர் :- திரு. க. கேதீஸ்வரன் (பிரதேச செயலகம் கோப்பாய்)

1 ஆம் நாள்
இடம்:- யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி
காலம்:- 30.03.2002 (சனி பி.ப. 1.30 மணி)

2 ஆம் நாள்
இடம்:- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
காலம்:- 31.03.2002 (ஞாயிறு பி.ப. 1.30 மணி)

நிகழ்வுகள்: நாட்டியம், நாடகம், இசைக்கச்சேரிகள், கவியரங்கு, பட்டிமன்றம், சிறப்புச்சொற்பொழிவுகள், இன்னும் பல நிகழ்ச்சிகள்.

பிரவேசம் இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலாசாரப் பேரவை
வலிகிழக்கு பிரதேச செயலகம்.


# படையினரை அப்புறப்படுத்தி மீள் குடியேற்றத்திற்கு ஒத்துழைக்குக

### அமைச்சர் ஜயலத்திடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்திலே அரசநிறுவனங்கள், தனியார் வீடுகள் என்பவற்றில் இராணுவத்தினர் தற்போதும் நிலை கொண்டுள்ளனர். இது மக்கள் மீளக்குடியமர்வதில் தாமதத்தை ஏற்படுத்துவதோடு இராணுவத்தினர் தங்கியிருக்கும் கட்டடங்களின் உரிமையாளர்கள் வேறு இடம் தேடவேண்டிய தேவையையும் ஏற்படுத்துகின்றது.

எனவே இவ்வாறான இடங்களில் இருந்து இராணுவத்தினரை அப்புறப்படுத்தி மக்களின் மீளக்குடியமர்விற்கும் அரச அலுவலகங்களின் மீள செயற்பாட்டிற்கும் ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தென்மராட்சிப் பகுதியின் தனங்கிளப்பு மறவன்புலோ போன்ற பகுதிகளிலே இன்னமும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இப்பகுதி மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்க்கை நடத்துபவர்களாவர்.

இதனால் இவர்கள் தொடர்ந்தும் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். இவ்விடயம்பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டும் இதுவரை எவ்விதநடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

புதியஅரசினால் ஏற்படுத்தப்பட்டபுரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இப்பகுதி மக்களையும் மீளக்குடியமர வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு எம்முடைய அவலங்களைத் தெரியப்படுத்தி அவர்கள் மூலம் நடுநிலை காத்து இந்தஒப்பந்தத்தை சரியான முறையில் கடைப்பிடித்து தமிழ் மக்களின் மனக்குமுறலைத் தீர்த்து வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆவனசெய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளில் புலிகளின் தடை ஒரு காரணமாக இருக்குமாயின் அவ்வாறான தடையை நீக்குவதற்கு அயல் நாட்டு இராஜதந்திரிகளின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதற்கும் இளைய சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் இனிவரும் காலங்களில் எல்லோரும் கைகோர்த்து ஒற்றுமையாக வாழ்வதற்கு தங்கள் முன்னின்று ஆவன செய்ய வேண்டும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## ஆசிய வலயத்தில் மின் உற்பத்தி அபிவிருத்தி

### 9 நாடுகள் ஒப்பந்தம்

(கொழும்பு)

ஆசிய வலயத்தில் மின் உற்பத்தியை அபிவிருத்திசெய்ய ஒத்துழைப்பு வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கைஉட்பட 9 தெற்காசிய நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன.

உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள ஒவ்வொரு நாடும் தனது மின்உற்பத்தி, மற்றும் மின்சக்தி, முகாமைத்துவ தகவல்களை பரிமாறி கொள்ளுமான கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்காசியாவின் மின்உற்பத்திஅபிவிருக்கிக்க அமெரிக்காவின் எஸ்.ஏ. ஆர். ஐ. திட்டத்தின்மூலம் உதவி வழங்கப்பட்டுள்ளது எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

### தூயவாழ்விற்கு

பதில்லை. ஞானமொன்றே அறியாமையை அழிக்க முடியும், ஒளி இருளை அழிப்பது போல. வாழ்க்கை என்ற (ஜீவன) ஜோதி மனித சமுதாயத்தைப் போதிக்கவும், அதற்குச் சேவை செய்யவும் சுடர் விட்டு எரியட்டும். பக்தனுக்கு பலம் இறைவனை நினைத்து நினைத்து அவன் வடிக்கும் கண்ணீரே!

## இன்று ஒரு தகவல்

# பயம் பக்தியாகியதில் பாம்பு வழிபாடு வந்தது

சூரியவழிபாடு, நிலா வழிபாடு, மர வழிபாடு முதலிய இயற்கை வழிபாடுகள மிகவும் தொன்மை வாய்ந்தவை. இவ்வழிபாடுகளைப் போலவே பாம்பு வழிபாடும் அதனோடு தொடர்புடைய புற்று வழிபாடும் பழமைச் சிறப்புடையவை.

பயம் பக்தியாகக் கனிந்ததில் விளைந்தது பாம்பு வழிபாடு. தெய்வ சக்தியால் பாம்பைக் கட்டுப்படுத்த முனைந்து, அதனையே தெய்வமாகப் போற்றி வழிபடத் தொடங்கினர் பழங்கால மக்கள்.

பாம்பை வழிபட்ட மக்கள், அது மறைந்து உறையும் பல வாசல் 'கோயிலான' புற்றையும் வழிபட்டனர்.

காணிக்கைப் பொருள்களைப் புற்றுகளில் செலுத்துவது என்பது, உண்மையில் அப்புற்றுகளில் வாழ்கின்ற பாம்புகள் வெளியில் வந்து தொல்லைகள் தராமல் இருப்பதற்குச் செய்யப்படும் ஒரு தந்திரமாகவே இருக்கின்றது.

மகப்பேறு கிடைக்கவும், கேதுவால் ஏற்படுகின்ற தொல்லைகள் தீரவும், நாக தோஷம் தணியவும் சுமங்கலிகள் புற்று வழிபாட்டை மேற்கொள்கின்றனர்.

கிராமப்புற மக்கள் இப்புற்று வழிபாட்டின் மூலம் பல அற்புதக் காட்சிகளைக் கண்டதாகவும், சிறந்த பலன்களைப் பெற்றதாகவும் நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வழிபாட்டினை இன்றும் தொடர்ந்து வருவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

பாம்பினை கனவில் காண்பதும், நேரில் காண்பதும் தெய்வங்களே பாம்பு வடிவில் தரிசனம் தருவதாகவும், அருளுவதாகவும் நம்புகின்றனர். இயல்பாகவே அச்ச உணர்வுகளைத் தூண்டக்கூடிய பாம்பு புற்றை, கோயில் வளாகத்திலோ வெளியிலோ வழிபடும் போது எவரும் அஞ்சுவதில்லை. துன்பம் செய்வதில்லை என்ற நம்பிக்கை எப்போதும் மக்களிடம் இருந்து கொண்டிருக்கின்றது.

பாம்பு வழிபாடு ஆறு சமயத் தெய்வங்களுடன் எந்த வகையிலாவது தொடர்பு கொண்டுள்ளது.

புற்று மண்ணுக்குச் சில அபூர்வமான சக்திகள் இருக்கின்றன. மருத்துவ குணமுடையது. சில கோவில்களில் புற்று மண்ணைப் பிரசாதமாக வழங்குகின்றார்கள்.

நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்க்கைச் சக்கரம் உருள்கிறது. நம்பிக்கையின் அடிப்படையில் வழிபாடு தொடர்கிறது. ●

டாக்டர் டி. செல்வராஜ்
நன்றி
கோபுரதரிசனம்

## வட-கிழக்கு கைதிகள்

# சொந்த இடங்களிலுள்ள சிறைகளுக்கு மாற்றம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி களுத்துறை, வெலிக்கடை மற்றும் தென் பகுதியிலுள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அண்மையில் சிறைக் கூடங்களில் தடுத்து வைப்பதற்குரிய நடவடிக்கையினை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், திருமலை மாவட்டங்களைச் சேர்ந்த 43பேர் அவர்களது சொந்த இடத்திற்கு அண்மையிலுள்ள சிறைக்கூடங்களுக்கு மாற்றப்படவுள்ளனர்.

இந் நடவடிக்கையில் பெண் கைதிகளுக்கு முன்னுரிமையளிக்கப்படவுள்ளது, (உ)

# சூடான கடிதத்திற்கு சுருக்கமான பதில்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு ஆயுதப் படையினரை கடமையிலீடுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமல் விட்டமை வேதனைக்குரியது என்று சுட்டிக்காட்டி ஜனாதிபதி உள்துறை அமைச்சருக்கு எழுதிய சூடான கடிதத்திற்கு அமைச்சர் சுருக்கமான பதில் அளித்துள்ளார்.

தேர்தல்கள் ஆட்சிமுறையின் முக்கிய அம்சம்ஆகும். அவை முற்றிலும் சிவில் விவகாரங்களாகும். இவை தொடர்பான விவகாரங்கள் பொலிஸாரினால் நிறைவேற்றப்படவேண்டியவை.

எமது அரசாங்கம் இராணுவ மயப்படுத்தலுக்கு முடிவுகட்டும் கொள்கையுடையது. அரசுக்கெதிராக பாரிய அச்சுறுத்தல் ஏற்படும்சந்தர்ப்பத்தில் மட்டுமே ஆயுதப் படைகள் கடமையிலீடுபடுத்தப்படல் வேண்டும். சட்டத்துறை அதிகாரிகளின் ஆலோசனைபெற்றே அதனை அமுல் செய்தலும் வேண்டும்.

நான் 25 வருடகால அரசியல் அனுபவமுதிர்ச்சி கொண்டவன். இரண்டு அரசாங்கங்களில் அமைச்சரவைப் பதவி வகித்தவன். எனது கணிப்பின்படி தேர்தல் கடமைகளில் ஆயுதப்படைகளை ஈடுபடுத்த வேண்டிய தேவை இருந்திருக்கவில்லை.

1994 இன் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் மிகக் குறைந்த வன்செயல்கள் இடம்பெற்ற தேர்தல் இதுவேயாகும். இதில் எனது கணிப்பு சரியென்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

நல்லாட்சியை அமுல்செய்ய விரும்பிய எமது அரசாங்கம் 17 வது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதில் கண்ணாயிருந்தது. ஆனால் தங்களின் ஒத்துழையாப்போக்கினால் அதனை அமுல்செய்ய முடியாது போயிற்று.

தேர்தல் ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டிருந்திருக்குமானால்தங்களுக்கேற்பட்டிருந்த அச்சங்கள் அரசியல் சார்பற்ற சுதந்திரமான அமைப்பொன்றினால் தீர்க்கப்பட்டிருக்கும்என்று அமைச்சரின் பதில்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# ஒரு நூற்றாண்டுகாலத்தில் அழியும் மொழிகளில் தமிழ் 17 வது இடத்தில்

(இறத்தோட்டை)

இன்னும் ஒரு நூற்றாண்டு காலத்தில் அழிந்து போகவுள்ள மொழிகளின் வரிசையில் தமிழ் மொழி பதினேழாவது இடத்தில் உள்ளது என்று மலேசிய நாட்டின் பிரபல தமிழ் எழுத்தாளரும், உலகத் தமிழ் எழுத்தாளர் மன்ற உபதலைவருமான சை. பீர்முகமது தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அவருக்கான இலக்கிய ஆர்வலர்களின் சந்திப்பொன்றினை மத்திய மாகாணசபை உறுப்பினர் எம்.சிவஞானம் அண்மையில் ஏற்பாடு செய்திருந்தார்.

மாத்தளை ஹோம்ஸீஸ் விடுதி கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலுக்கு வரலாற்று நூலாசிரியர் ஏ.ஏ. புவாஜி தலைமை தாங்கினார்.

பீர்முகமது தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; இன்னும் ஒரு நூற்றாண்டு காலத்தில் எந்தெந்த மொழி வாழ்ந்து கொண்டிருக்கும். எந்தெந்த மொழி அழிந்து விடும் என்று உலகளாவிய ரீதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் அழிந்து போகவிருக்கும் மொழியாக தமிழ் பதினேழாவது இடத்தில் உள்ளது.

இதற்குக் காரணம் தமிழ் மொழி தொழில் சார்ந்த மொழியாக மாற்றம் பெறாமல் இருப்பதேயாகும்.

இந்த உலகில் தமிழ் ஆட்சி மொழியாக எங்குமேஇல்லை. தமிழைப் போதனா மொழியாகக் கற்பவர்களுக்கு மலேசியாவில் தொழில் வாய்ப்பு இல்லை.

இலங்கையிலும் கூட தமிழைக் கற்றவர்கள் ஆசிரியர் தொழிலைத்தவிர வேறு தொழில்களைப் பெறும் வாய்ப்பற்றவர்களாக இருப்பதாக அறிந்தேன்.

தொழில் சார்ந்த மொழியாக தமிழ் மொழி மாற்றம் அடையும் வரை எதிர்காலத்தில் தமிழ் மொழிக்கு ஆபத்து உள்ளது என்று குறிப்பிட்டார். (எ)

## பேருந்து தரிப்பிடம்

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ். வீதியில் இணுவில் மத்திய கல்லூரிக்குச் சமீபமாக புதிய பேருந்துத் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (உ-124)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இன்று மு.ப. 10 மணிக்கு நடாளுமன்ற உறுப்பினர் என் ரவிராஜ் தலைமையில் கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது. (உ)

## அறநெறிப் பாடசாலை இயங்குகிறது

(ஊர்காவற்றுறை)

பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

சிலகாலம் இயங்காதிருந்த இப்பாடசாலை பருத்தியடைப்பு கதிரேசானந்தா வித்தியாலயத்தில் இயங்குவதற்கு தீவக வலயக் கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியதை அடுத்து இம்மாதம் நடுப்பகுதியிலிருந்து அப்பாடசாலையில் இயங்க ஆரம்பித்துள்ளது. (எ- 75)

## இளங்கலைஞர் மன்றத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங் கலைஞர் மன்ற வருடாந்த இசை விழாவின் 8ஆம் நாளான இன்று, காலை 9.00 மணிமுதல் பாட்டு, புல்லாங்குழல் இசை, இசைக்கச்சேரியும் பி.ப. 3.30 மணிமுதல் மங்கள இசை, பாட்டு, குரலிசை, இசைக்கச்சேரி, நர்த்தன மாலை ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (உ-3)

## வாகன விபத்து

(கொழும்பு)

தம்புள்ள பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் 7 பேர் காயமடைந்தனர்.

தம்புள்ள நீதிமன்றச் சந்தியில் தனியார் பஸ் ஒன்றுடன் வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதாக தம்புள்ள பொலிஸார் தெரிவித்தனர். (இ—5)

## கும்பாபிஷேகம்

(மந்திகை)

சாவகச்சேரி கொல்லங்கிராய் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது.

● ● ● ●

அல்வாய் சமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.15மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறவுள்ளது. (உ- 23)

## க.பொ.த.(சா-த) பரீட்சைப் பெறுபேறு இணையதளத்தில்வெளியீடு

(கொழும்பு)

கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றைய தினம் கல்வித்திணைக்களத்தினால் இணையத்தளம் மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படிபரீட்சைக்கு 6இலட்சம் பேர் நாடு முழுவதிலும் இருந்து தோற்றியுள்ளனர்.

இம் முறை ஏ,பி,சி,எஸ், டபிளயு என்ற அடிப்படையில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## கிழக்கு அபிவிருத்தியில் அரசாங்கம் அசமந்தம்
### மக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசும் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் அரசாங்கம் வடபகுதியின் அபிவிருத்தி பற்றியே கவனம் செலுத்தி வருகின்றது என்றும் கிழக்கு மாகாணத்தைபற்றி சிந்திப்பதில்லை என்றும் கிழக்கு மாகாண மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அப்பகுதிக்கு விஜயம் செய்தஊடக செய்திக் குழு ஒன்றிற்கே இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்.

அவர்கள் மேலும்தெரிவித்ததாவது, எங்கள் மாகாணத்தில் பெரிய அளவில் அபிவிருத்தி திட்டங்களை அமுல் செய்ய எந்த அரசியல் வாதியும் முன்வரவில்லை.

வீதிகள், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், தொலைபேசி, ஆகிய துறைகளில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற அரசாங்கம் கவனம் செலுத்த வில்லை என்றும் கூறியுள்ளனர். (உ)

## வில்லங்கம் தேடும் உல்லாசப் பயணிகள்

(காரைநகர்)

காரைநகர் கஜுரீனா கடற்கரைக்கு உல்லாச பயணம் மேற்கொள்பவர்களால், அங்கு மீன்பிடித் தொழில் புரிபவர்கள் சிரமத்தினை எதிர்நோக்கி வருவதாக கூறப்படுகிறது.

உல்லாசப் பயணிகள், கரையில் கட்டியிருக்கும்கட்டு மரங்களை கடலினுள் இழுத்துச் சென்று விடுவதாகவும்,

பின்னர் - அவை அலைகளினால் அடியுண்டு வேறு இடங்களுக்குச் செல்வதால் அதிகாலையில் கட்டுமரங்களைத் தேடியலையும் நிலை உள்ளதாகவும் மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கரையோர களங்கட்டித்தடிகளையும் இவர்கள் தேசமாக்குவதாகவும், மது போதையில் பலர் காணப்படுவதால், இவற்றை எடுத்துக் கூறுமிடத்து வீண் சச்சரவு ஏற்பட வாய்ப் பேற்படுவதாகவும் மேலும் தெரிவித்தனர். (உ-246)

## சிந்தனைக்கு விருந்து

### நீதியை மறந்த பேரினவாதம் ஒழிக!

பாதையைத் திறந்தே எளிதினிற் கொழும்பு
பஸ்ஸினில் சென்றிடல் வேண்டும்
நாதியற் றலையும் அகதிகள் வாழ்வில்
நன்மைகள் பெருகிடல் வேண்டும்
போதிவாழ் புனிதன் மதகுரு மார்கள்
புனிதராய் மிளிர்ந்திடல் வேண்டும்
நீதியை மறந்த பேரின வாதம்
நிலையழிந் தொழிந்திடல் வேண்டும்.

'பழையவன்'

## பாம்பினால் கடியுண்டார்

(யாழ்ப்பாணம்)

புகையிலைத் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்காகி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொண்டைமானாற்றைச் சேர்ந்த கே. கண்ணதாசன் (வயது-26) என்ற இளைஞனே பாம்பினால் கடியுண்டவராவார். (இ-19)

## தமிழகத்திலிருந்து விக்கிரகங்கள்

(கொழும்பு)

மன்னாரின்வரலாற்று புகழ் வாய்ந்த திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு தமிழகத்திலிருந்து 4 விக்கிரகங்கள் எடுத்துவரப் படவுள்ளன.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பு பகுதியிலிருந்த இவ்வாலயத்தில்இந்துகலாசாரஅமைச்சின் முயற்சியால் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவதும் தெரிந்ததே. (உ-8)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

வேலணை சேர் வைத்திய லிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் 9 வது ஆண்டு நிறைவு விழாவும், முத்தமிழ் விழாவும் நாளை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சங்கத்தலைவர் இ.சுந்தரமூர்த்திதலைமையில் நடைபெறவுளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புரைகளை தினக்குரல் பிரதம ஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வன், சட்டத்தரணி சோ. தேவராசா ஆகியோர் ஆற்றவுள்ளனர். (உ)

## பண்ணிசைப் போட்டி

(இணுவில்)

இணுவில் திருநெறி தமிழ் மறைக்கழகம் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு பாடசாலைமாணவரிடையே பண்ணிசைப் போட்டியினை 4 பிரிவுகளாக நடத்த ஏற்பாடுசெய்து வருகின்றது.

ஏப்ரல்மாதம் 5 ஆம் திகதி இதற்கான விண்ணப்ப முடிவு திகதி என்று அறிவிக்கப்படுகின்றது. (எ-49)

## நினைவிழந்த நிலையில் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே மனநோயாளி ஒருவர் சைக்கிளைச் செலுத்தியதால் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்து நினைவிழந்த நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறை டிப்போ முன்இடம் பெற்ற இந்த விபத்தில் துன்னாலை மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரவிக்குமார் என்பவரே படுகாடமடைந்தவராவார். (உ-23)

## கலந்துரையாடல்

(மந்திகை)

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் நலன் காக்கும் கழகத்தின் விசேட கலந்துரையாடல் எதிர் வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை பி. ப. 2.00 மணிக்கு புலோலி கெங்கா கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளகுடியமர்தல் தொடர்பாக ஆராயப்படவுள்ள இக் கலந்துரையாடலில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி மற்றும் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். உ-23)

# தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகள் அங்கீகரிக்கப்படாதவிடத்து உண்மையானசமாதானம் அமையமாட்டாது

## யாழ் வந்த சர்வோதயக் குழுவிடம் தெளிவுபடுத்துகை

(தென்மராட்சி)

புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானம் அல்ல. தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் தவறும் பட்சத்தில் சமாதானம் என்பதுஉண்மையானதாக அமையமாட்டாது. நாட்டில் சமாதானம் ஏற்பட இருசாரார் மத்தியிலும் கருத்தியல் ரீதியான மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

இவ்வாறு கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளரான அருட்திரு சீ.ஜீ ஜெயக்குமார் அடிகள் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த சர்வோதய இயக்க தூதுக்குழுவினருடன் நடத்தப்பட்ட சந்திப்பின்போது தெளிவுபடுத்தினார்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில்,உபதலைவர் எஸ்.பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் சர்வோதயத்தின் சார்பில் திருமதி நீத்தா ஆரியரட்னா, கலாநிதி ஷெரிப் உட்பட வேறு சிலரும் பங்குகொண்டிருந்தனர்.

அருட்திரு ஜெயக்குமார் அடிகள் அங்கு தொடர்ந்தும் குறிப்பிடுகையில்;

நாட்டில் சமாதானப் பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் இவ்வேளையில் இரு முனைகளிலும் இருக்கக்கூடிய மக்களை ஒன்றிணைத்து, அவர்கள் மத்தியில் இருந்து வரும் நம்பிக்கையீனம், அன்பின்மை போன்றவற்றினைக் களைய வேண்டும்.

சமாதானம் என்பது இதயத்தின் அடியில் இருந்து வர வேண்டும். இதனை ஏற்படுத்துவதற்கு கலாநிதி ஏ.ரீ ஆரியரட்னா முன்னின்று உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சர்வோதய இயக்கத்தின் உபதலைவரான திருமதி நீத்தா ஆரியரட்னா இச்சந்திப்பில் உரையாற்றும்போது,

இன்றைய காலகட்டத்தில் மக்கள் சமாதானத்தையே வேண்டிநிற்கின்றனர். சமாதானத்துக்கான பணிகளை நாம் தொடர்ச்சியாகச் செய்யவேண்டும். சர்வோதயம் நாட்டிலுள்ள 15 ஆயிரம் கிராமங்களில் பணிசெய்து வருகின்றது.

அண்மையில் அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட சமாதானத்துக்கான பிரார்த்தனையில் 6 லட்சத்து 50 ஆயிரம் பேர் பங்குகொண்டிருந்தனர். நாம் தமிழ் மக்களுடன் சகோதரத்துவ உணர்வுடன் பழகி வருகின்றோம்.

நாட்டில் ஆயிரம் கிராமங்களை இணைத்து அதன்மூலம் சமாதானச் சிந்தனைகளை முன்னெடுக்கவுள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

சர்வோதய இயக்கத்தின் சமாதான செயல்பாட்டிற்கான அமெரிக்க ஆலோசகரான கலாநிதி ஷெரிப் கருத்துரை வழங்குகையில்;

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் இரு பக்கத்திலும் முரண்பாடுகள் களையப்பட்டு, உள்ளன்பு கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

பெரிய அளவிலான நம்பிக்கையீனம் இருபக்கத்திலும் இருந்து வருகின்றது. தமிழர்களும் சிங்களவர்களும் இனப் பிரச்சினை விடயத்தில் தம் மிஷ்டம் போல நடனம் ஆடி வருகின்றனர்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சமாதானத் தியானம் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். சமாதானத்துக்கான உறுதியான பணிகளை சர்வோதயம் மேற்கொண்டு வருகின்றது எனச் சொன்னார்.

இச் சந்திப்பின்போது புனித சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு பேர்னாட் அடிகள், டாக்டர் வி. தியாகராசா, திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (உ-77)

## சான்றிதழ் வழங்கல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் கைத்தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

மேற்படி செயலக பிரதம எழுதுவினைஞர் எஸ். ஜெகபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில்கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வடமாகாணப்பணிப்பாளர் ரி. பாலசுப்பிரமணியம் பயிற்சி பெற்றோர்க்குச் சான்றிதழ்களை வழங்கினார். (எ-75)

## நிர்வாகிகள் தெரிவு

(கோப்பாய்)

அண்மையில் நடை பெற்ற கோப்பாய்மத்தி விவசாயிகள் சம்மேளனத்தின் பொதுக்கூட்டத்தில் நிர்வாகிகளாகப்பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் வ. சுப்பிரமணியம், உபதலைவர் த. யோகரத்தினம்,செயலாளர் ஆ.ஈஸ்வரன், உபசெயலாளர் த.தர்மரத்தினம், பொருளாளர் எஸ். ஜெபரத்தினம். (எ-77)

★ ★ ★

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட நலன்புரி நிலையங்களின் சமாசத்தின் நிர்வாகிகளாய்பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் நா. கணேசன், உபதலைவர் சு. யோகராசா, செயலாளர் மு. ஜெகநாதன், உபசெயலாளர் கொ. குணராசா,பொருளாளர் ந.பாஸ்கரன்.

மற்றும் 5பேர் கொண்ட உறுப்பினர்களும்தெரிவு செய்யப்பட்டனர். (உ-77)

# ஈழத்து இலக்கிய வரலாற்றில் மறக்க முடியாதவர் வரதர்

### பவழ விழாவில் கலாநிதி சொக்கலிங்கம்

(யாழ்ப்பாணம்)

மாணவனாக இருக்கும் போது 16 வது வயதிலே எழுதத் தொடங்கிய வரதர் தமிழ் இலக்கிய உலகில் அரிய சாதனைகளைச் சாதித்துள்ளார். ஈழத்து இலக்கிய கர்த்தாக்களின் வரலாற்றில் அவர் என்றுமே மறக்கமுடியாதவர்.

இவ்வாறு இலக்கிய கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்) மூதறிஞர் வரதராசனின் (வரதர்) பவழ விழாவில் கௌரவிப்புரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

புதன் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் மு.ப 10-00 மணியளவில் கலாநிதி குணராசாவின் (செங்கை ஆழியான்) தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

கலாநிதி சொக்கலிங்கம் தொடர்ந்து பேசுகையில்

ஈழத்துக் கவிதை வரலாற்றிலே முதன்முதலாக தரமான புதுக்கவிதைகளைப் படைத்த பெருமை வரதருக்குண்டு. குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடியாக அவர் உழைத்தவர்.

சஞ்சிகை, பத்திரிகை ஆகியவற்றிற்கு ஆசிரியராகஇருந்தவர். இவர் வெளியிட்ட ஆங்கில தமிழ் அகராதி திருக்குறள் பொழிப்புரை என்பன இவரின் தமிழ் மொழிப் புலமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்று குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வரதருக்குபொன்னாடைபோர்த்தி வாழ்த்துரை வழங்குகையில்,

சங்ககாலத்தில் புலவர்கள் வறுமையில் வாடினார்கள். அந்த நிலை இப்பொழுது மாறிவருகிறது. மொழித்துறை சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்கள் இன்று அதிக வருமானம் பெறுகிறார்கள்.

இன்றைய அரசியல் வாதிகளும் பத்திரிகையாளர்களை ஆதரிக்கத் தவறுவதில்லை. ஏனெனில் நாடுகளின் தலைவிதியை பத்திரிகையாளர்களே நிர்ணயிக்கிறார்கள்.

இன்று யாழ் குடாநாட்டில் அச்சுத்துறை நவீனமடைந்து வருகிறது. இதன் வளர்ச்சி தமிழ் வளர்ச்சிக்கு பேருதவியாக அமைகிறது.

அதேவேளை மாணவர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது. வாசிப்புத் தவிர்ந்த வீண்பொழுது போக்குகளில் அவர்கள் ஈடுபட்டுவருவது வேதனைக்குரியது என்றார். (எ-19)

## வடபகுதிதுறைமுகங்களுக்கு சர்வதேச கப்பல்கள் வரும்

(கொழும்பு)

காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களுக்கு சர்வதேச கப்பல்கள் வந்து செல்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்து வருவதாக வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக ரவி கருணாநாயக்கா மேலும் தகவல் தருகையில்;

யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள விலைவாசிகளை குறைக்கும் நோக்குடனும், பொருட்களைப் பெறுவதில் உள்ள காலதாமதத்தைக் குறைப்பதற்குமாக, இந்தியாவிலிருந்து நேரடியாக எடுத்து வரப்படும் உணவுப் பொருட்களை யாழ். குடாநாட்டு மக்கள் இலகுவில் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இக்கப்பல் போக்குவரத்து சேவை உதவும் என்றும்,

இத்துறைமுகங்களில் சுங்கம் மற்றும் வசதிகளை ஏற்படுத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

## ஒவ்வோராண்டும் கசநோய் காரணமாக 20 இலட்சம் பேர் மரணம்

(கொழும்பு

ஒவ்வொரு ஆண்டும் 20 இலட்சம்பேர் கசநோய் காரணமாக உயிரிழந்து வருகிறார்கள் என உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

வறுமையே இதற்கு காரணமெனவும் ஒவ்வொருநாட்டிலும்இருந்து வறுமையை ஒழித்துக் கட்டுவதன் ஊடாக இந்நோய் அதிகரித்துவருவதனை கட்டுப்படுத்தலாம்என வும்,

இலங்கைபோன்ற வளர்முக நாடுகளில் வாழும்மக்கள் போர்ச்சூழல் காரணமாகவும் வறுமைகாரணமாகவுமே அதிகளவு பாதிக்கப்பட்டு வருகிறார்கள் எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (உ-8)

## தடுப்புக்காவல்

(ஊர்காவற்றுறை)

சட்டவிரோதமான முறையில் மாடுகள் இரண்டினை லாண்ட்மாஸ்ரரில் கொண்டு சென்றவர்களை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்த போது,

கைது செய்யப்பட்ட இருவரையும் 3 ஆம் திகதிவரை விளக்க மறியலில்வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றபதில் நீதவான் மு. திருநாவுக்கரசு உத்தரவிட்டார்.

மேற்படி நபர்களினால் கொண்டு செல்லப்பட்ட மாடுகள் மற்றும் லாண்ட்மாஸ்ரரினை தடுத்துவைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (உ-75)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கட்கிழமை தேவரயாளி யங்லயன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டு கழகம் 4:1 என்ற கோல்கணக்கில் கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகத்தை வென்றுள்ளது. (உ-3)

## வருடாந்த மகோற்சவம்

(கொழும்புத்துறை)

கோப்பாய்ச்சந்தி மிரியத்தனை வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் புதன்றுஆரம்பமாகிதொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெற்று வருகிறது. (உ-223)

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை
- குறள்

# வலம்புரி

## கவனிப்பார் யாருமில்லை

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு யுத்தநிறுத்தம் அமுலில் இருக்கும் போது, மண்டைதீவில் கட்டடங்கள் அழிக்கப்பட்டு, மரங்கள் தறிக்கப்பட்டு, படையினர் மேற்கொள்ளும் நாசகாரம் குறித்து யாருமே கவனிப்பதாக இல்லை.

1991ல்இடம்பெயர்ந்த சூழலில் மண்டைதீவுப் பகுதி திட்டமிட்டு அழிக்கப்பட்டு வந்துள்ளது எனினும் அரச உயர் அதிகாரிகள்,எவரும் மண்டைதீவின் அழிவுவிடயத்தில் எந்தப் புனரமைப்பிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. எதற்கும்மாலை மரியாதை செய்தால் மட்டுமேநம்அரச - அரசியல் பிரபுக்கள் ஏதாவதுஉதவுவர். கடமை என்ற பார்வையில் மண்டைதீவில் எந்தப் புனரமைப்புமே செய்யப்படவில்லை. அதே நேரம் யுத்தநிறுத்தம் அமுலில் இருக்கும் போது எஞ்சியுள்ள கட்டிடங்களை உடைப்பது ஓடுகளைக் கழற்றுவது மரங்களைத் தறிப்பது எல்லாம் சர்வசாதாரணமாக அங்கு நடந்து கொண்டிருக்கின்றதெனில் தட்டிக் கேட்க ஆளில்லை என்பதே பொருளாகும்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் அமைச்சர்களுக்கு மண்டைதீவின் அழிவுகளை அதன் சேதங்களை அங்குள்ள மக்களின் தொழில் இழப்புக்களைச் சுட்டிக் காட்ட, நேரில் அழைத்துச்சென்று காண்பிக்க நம் அரச அதிகாரிகளுக்கு நேரமில்லை.

அப்படியாயின் அப் பகுதியை எங்ஙனம் புனரமைக்க முடியும் என்பது கேள்விக்குரியது.

இது ஒருபுறமிருக்க நெல்விளையும் அப்பூமியில் கடல் தடுப்பு அணை உடைந்து கடல் நீர் விளைமண்ணை உவராக்கியுள்ளது. எனினும்நமது கமநலசேவைகள்திணைக்களம் அது குறித்து எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை. நெல் விளைந்த மண் உவராகிப்போவது குறித்து கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்காவிடில் அதனை யார் செய்ய முடியும்

எனவே இது விடயங்களில் வேலணை பிரதேச செயலகம், ஓர் செயல் திட்டத்தைத் தயார் செய்து அழிவுற்றிருக்கும் மண்டைதீவைப் புனரமைப்புச்செய்து அங்கு மக்கள் மீளக்குடியமர வாய்ப்பளிக்கவேண்டும்.

# தூய வாழ்விற்கு துணை செய்யக்கூடியதாய் அமைந்த அருள் மொழிகள் நமக்கு வழிகாட்டும்

தொகுப்பு:
**வசந்தா மணாளன்**

ஆயிரம் நூல்களைப் பயிலுவதைவிட,ஒரு உயர்ந்த நூலின்படி ஒழுகுதல் மேலானது.அயல் நாட்டு மோகமென்னும் பாசி, நம் நாட்டுப்பண்பாடு என்னும் குடிநீரை மூடிக்கொண்டிருக்கிறது. தமக்கு உள்ள உரிமையையும்,கடமையையும் ஒவ்வொருவரும் உணர்ந்து எல்லை மீறாதிருக்க வேண்டும்.டார்ச் விளக்கில் பற்றரி இருந்தால் தான் ஒளி கிடைக்கும்.அது போல உள்ளத்தில் மகிழ்ச்சியிருந்தால்தான் முகம் மலர்ந்து விளங்கும். அறிஞனுக்கு ரோஜாவின் அழகும் மணமும் தெரியும். முட்டாளுக்கு முள்மட்டுமே தெரியும். நன்றிமறந்த கயவரையும் சான்றோர் மறந்து மன்னிப்பார்கள். உண்பதற்காக உயிர் வாழாது, உயிர் வாழ்வதற்கே உண்ணவேண்டும்.உலகில் நாள்தோறும் ஒவ்வொரு பொருளும் (விலை) உயர்ந்து கொண்டே போகிறது. ஆனால் மனிதனைத்தவிர, மனிதன் (பண்பில்) தாழ்ந்து செல்கின்றான்.

பொறுமையே தவம்

இல்லாததற்கு ஏங்காது உள்ளதைக் கொண்டு நாம் உள்ளம் மகிழ வேண்டும். மாட்டுக்காரன் மேச்சல் தரவைக்கு ஓட்டிக் கொண்டு தான் போவான், மேயவேண்டியது மாடுதான். எனவே இறைவன்மேல் பாரத்தைப் போட்டுக் கடமையை மறக்க வேண்டாம். பொறுமையே தவம்.திருப்தியே மகிழ்ச்சி. கருணையே புண்ணியம், இறைவன் நாமமே இன்பந்தருவது.உடலென்னும் இயந்திரம் வேலை செய்ய உணவு என்னும் எரிபொருள் (எண்ணெய்) அவசியம். உண்ணலும் ஒருகடமையாகும். பக்தி,உறுதி,சத்தியம்,தர்மம் என்னும் நான்கும் கால்களாகக் கொண்ட மண்டபம் போன்ற சான்றோரை மாயையென்னும் காற்றால் அசைக்க முடியாது.நாளைய உலகம் இளைஞர்கள் கையில்,அவர்கள் முயன்றால் முடியாததில்லை. 'வித்'என்றால் ஒளி. 'யா' என்றால் அது ஒளியை தரும் அது என்பதுதான் வித்தியா. (கல்வி) ஏட்டுக்கல்வி உடல் கூட்டைக்காக்கவே உதவும்.மோட்ச வீட்டுக் கல்வியையே நாம் ஈட்டிக் கொள்ளவேண்டும்.

பெற்ற மக்களைச் செவிலியர் வளர்க்க விட்டால் பெற்றோர்களை யாரென்று பிள்ளைகள் கேட்கும். பணத்தை நாம் ஆளவேண்டும்.பணம் நம்மை ஆளவிடக் கூடாது. இறைவன் காரணமின்றி எதையும் படைக்கவில்லை. உன்னையும், என்னையும் கூட அப்படியே! பிறவி என்னும் பயணத்தில், மனித உடல் ஒரு தங்கும் விடுதியே, விதையை நட்டு எருவிட்டு, மணல் போட்டு நீரூற்றினால், விதை அவற்றிலுள்ள சத்துக்களை எடுத்து கொள்கிறது. அவையாக மாறுவதில்லை.எந்தப்பொருளைப் பார்த்தாலும் அதிலுள்ள நல்லதையே நம் பார்வையில் படவேண்டும். உண்ணும் உணவை வீணாக்காமல் இருப்பதே நீ செய்யும் அன்னதானமாகட்டும். உண்பதில் மட்டும் சத்து இருந்தால் போதாது. பார்ப்பது, கேட்பது, முகர்வது, உணர்வது எல்லாமே சத்தானதாக இருக்கவேண்டும்.ஒரே மலரில் முள்ளும் உண்டு. தேனும் உண்டு. ஒரே மனிதனிடம் குறையும் உண்டு, குணமும் உண்டு. வைரக்கல்லாயினும், சாணை பிடித்தால் தான் ஒளி விடும். சோதனைகளால் தான் பக்தி ஒளிவிடும்.

சம எடையில் நிற்க வேண்டும்

உடல்நலிவுற்றவன் உணவை வெறுக்கிறான். உள்ளம் நலிவுற்றவன் இறைவனையும் வெறுக்கிறான் இறைவனிடம் தாம் வேண்டியது கிடைக்காதவர்களே இறைவன் இல்லை என்பார்கள். சேயின் துன்பம் கண்ட தாய் வெறுமனே இருப்பதில்லை. பக்தனுடைய துன்பம் கண்ட இறைவனும் அவ்வாறு வெறுமனே இருப்பதில்லை. ஆசானைத் தேடி அலையவேண்டாம். உலகமே ஒரு பல்கலைக்கழகம் தான். பட்டம் பதவிக்காகப் பறக்கக் கூடாது. அது பறந்து வந்து மடியில் விழவேண்டும். தோன்றிய எதுவும் அழிவதில்லை. அது மற்றொன்றாக மாறுகிறது. அவ்வளவு தான் புளிக்குப் புளிக்கும் தன்மை நீங்குவதில்லை. ஆனால் மனிதனுக்கு மட்டும் மனிதத்தன்மை நிலைப்பதில்லை. நன்றிக்கு நாய். பொறுமைக்கு கழுதை, முயற்சிக்குச்சிலந்தி, சுறுசுறுப்புக்குஎறும்பு. மானத்திற்கு மான், ஆனால் மனிதனுக்கு என்ன? சாதி இரண்டொழிய வேறில்லை என்று சாற்றிய பின்னும், மீதி இத்தனை சாதிகள் எங்கிருந்து வந்தன? ஆக்கமும், தேவையும் தராசின் தட்டுகளாகச் சம எடையில்நிற்கவேண்டும்.

உலகில் தோன்றியுள்ள உயிரினங்கள்பற்பல. மனிதன் மட்டுமே சமைத்து உண்டு சத்தையும், சொத்தையும் வீணாக்குகின்றான். பிறந்த ஒவ்வொருவருக்கும்ஒவ்வொரு பெயர் இடப்படுகிறது. பலவகையாக இறந்த எல்லோருக்கும் ஒரே பெயர் 'பிணம்' என்று இடப்படுகிறது. உண்மையே சில வேளைகளில் பொய்போலத் தோன்றும். தவறு செய்யாத மனிதன் இல்லை. ஆனால் மீண்டும் தவறு செய்யாதிருக்க முன்வரவேண்டும். அறிவும், மானமும் பங்காளிகள். ஒன்றை ஒன்று எதிர்த்துக் கொண்டேயிருக்கும். பசித்தவனுக்குச் சுவை தெரிவதில்லை, பக்தனுக்குப்பசியேதெரிவதில்லை. நமது நடை, உடை, செயல், பழக்க வழக்கம் எல்லாமே ஓர் ஒழுங்காக அமைந்தால். உயர்ந்தோர் உள்ளங்களில் இடம் கிடைக்கும். பாரதப் பெண்களின் பண்புக்கு உலக அரங்கிலே உயர்ந்த மதிப்பு இருக்கிறது. வாக்குக்கு அழகு, வாய்மை, வனப்பை தருவது தூய்மை.

கடவுள் ஒன்றே

அறிவுறுத்துவோர் தயாரிப்பாளர், உழைப்பவர் இம் மூவரும் மனித சமுதாயம் என்னும் முக்காலியின் மூன்று கால்கள். ஆயிரம் அறிவுரைகளை அள்ளி வீசுவதைவிட ஓர் அரிய செயல் செய்தல் நலம். சொல்லுதல் எல்லோருக்கும் எளிது, சொன்ன வண்ணம் செய்வது அனைவருக்கும் அரிது. போதும் என்ற மனது இல்லாதவன் என்றைக்கும் ஏழையாகவே இருக்கிறான். நல்லதைக் கேட்டு நல்லதை எண்ணி நல்லதை செய்வோம். அல்லதை அப்பாற்படுத்துவோம். மதங்கள் வேறுவேறாக இருப்பினும் கடவுள் ஒன்றே! அணிகலன்கள் வேறுவேறாக இருப்பினும் தங்கம் ஒன்றே. தன்னம்பிக்கை என்பது தங்க பஸ்பம், அதுமட்டும் இருந்தால் ஆரோக்கியம் ஏற்படும். தன்னைப்பற்றித் தானே தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதால் பலர் இன்னும் தரையிலேயே கிடக்கின்றார்கள். முதன் முதலில் சந்திரமண்டலத்திற்குப் போக உதவியது தன்னம்பிக்கை என்ற விண்கலமேயாகும். சந்திரமண்டலத்திற்குச் சென்று திரும்பியவர்களுக்கும் இந்திரியங்களை அடக்குதல் அரிது.

இறைவன் நாமத்தை ஆழ்ந்த நம்பிக்கையுடனும் தூய்மையான உள்ளத்தின் உணர்வுகளுடனும் உச்சரிப்பதுடன், இறைவனின் பெருமைகளை உரக்கப்பாடுவதும் மிக உயர்ந்த சாதனையாகும். ஆன்மீக வாழ்க்கை என்பது அர்த்தமற்ற பேச்சென்று கருதிவிடக் கூடியதல்ல. அது ஆன்மாவிலேயே ஆழ்ந்து வாழ்வது ஆகும். அது தூய்மையான ஆனந்தப் பெருக்கின் அனுபவமே. முழுமையான வாழ்க்கைக்கு மறுபெயரே ஆன்மீக வாழ்க்கை. மனமே ஒருவனுடைய மோட்சத்திற்கும் பந்த பாசங்களுக்கும் காரணமாகிறது.ஆரோக்கியமே மிக உயர்ந்த இலாபம் எப்பொழுதும் போதுமென்ற தன்மை மிக உயர்ந்த செல்வம். நிர்வாணம் (மோட்ச நிலை) மிக உயர்ந்த ஆனந்தம்.

உலகமே இயங்குவதற்குச் சூரியனே காரணம். சூரியன் நமக்குக் கண்கண்ட தெய்வம். சூரியன் ஒளியின் இருப்பிடம், அதில் இருள் என்பதே இல்லை, அதுபோல ஆன்மா அறிவின் இருப்பிடம். அதில் அறியாமைக்கிடமில்லை. கர்மம் அறியாமையை அழிக்க முடியாது. ஏனெனில் அது அறியாமைக்கு எதிராக இருப்

(4-ம் பக்கம் பார்க்க)



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (46)

பாஸ்கா திருவிழிப்பு பெரிய சனி
(வெள்ளை)

திபா: 118: 1-2, 16 17, 22 23. 'அல்லேலுயா! அல்லேலுயா! அல்லேலுயா'

'ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை' ஆழமாய்த் தோண்டிப்புதைத்துவைத்தாலும் உண்மைகள் உறங்குவதில்லை! இயேசு இல்லாத கல்லறையைமூடிவைத்துக்காவல்செய்வதுமடமை அல்லவா? எனவேதான் வானதூதர் கல்லறை வாயிலைத் திறந்து வைத்து உண்மை தன்னை விடுவித்துக் கொண்ட செய்தியை உலகுக்கு எடுத்துச் சொல்கிறார்.

புனிதபூமிக்குத் திருப்பயணம் செல்லும் திருப்பயணிகள் பலரும் 'வெறுமையான கல்லறைக்குள் நுழைந்தேன்- என் உடல் சிலிர்த்து உள்ளம்நம்பிக்கைஒளியால் நிறைந்தது' என்று சொல்வதுண்டு. உண்மை தானே! அந்தக் கல்லறை வெறுமையாகா விட்டால் நம் உள்ள அறைகள் நிறைவடையுமா? நம் உள்ள அறைக்குள் நுழைய இயலாமல் அடைத்திருக்கும் அகந்தை, தன்னலம் போன்றவற்றையும் புரட்டி வீழ்த்துவோம். இயேசுவின் புது வாழ்வின் பிரசன்னம் அங்கு நிறைந்துநம்மை உயிர்ப்பிக்கட்டும்.

'காவலன்'

## தினசரி தியானம்

### உயர்வு

அல்லும் பகலும் அகண்ட வடிவே! உனை நான்
புல்லும்படியெனக்கோர் போதனைதான்
இல்லையோ?

- தாயுமானவர்

என் தகுதிக்கேற்ற உயர்வை அண்ணல், நீ எனக்கு அளிக்கின்றாய். என்னை நான் உயர் நிலைக்கு உயர்த்தாதது என்னே!

உயர்வைத் தேடுகிறவனுக்குஉயர்வு வருவதில்லை. உயர்வுக்குத் தகுதியுடையவன் ஆகின்றவனுக்கு உயர்வு வருகிறது, நல்லவன் ஆகின்றவனுக்கு உயர்வு தானே வருகின்றது. காய்ச்சிய பாலில் ஆடை தானே மேலெழுகிறது. மக்களுள் நல்லார்க்கு உயர்வு அங்ஙனம் வந்தமைகிறது.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

### கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்

## லங்கா சீமெந்து லிமிட்டட் கிளை சங்கம்

மேற்படி லங்கா சீமெந்து தொழிலாளர்கள் சுயவிருப்பில் வேலை விலகிய, விலகாத அனைத்து தொழிலாளர்களும் இன்று 30.03.2002 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு இணுவில் காரியாலயத்துக்கு தவறாது சமுகம் தரவும். லங்கா சீமெந்து லிமிட்டட் தலைவர் (Chairman) திரு.அணில் கொஸ்வத்த அவர்களுடன் தொடர்பு கொண்டதற்கிணங்க அனைத்து தொழிலாளர்களின் கையொப்பம் பெறவேண்டியுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்
செ.தேவகுணாளன்

செயலாளர்
ஆ.முத்துவேல்

(C/3780)



## மாபெரும் சிரமதானப்பணி 5

*இடம்:–* சாவகச்சேரி மகளிர் கல்லூரி
*காலம்:–* 31.03.2002 ஞாயிறு காலை 8மணி

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றம் முன்னின்று நடாத்தும் மாபெரும் சிரமதான பணியில் மன்ற அங்கத்தவர்கள், ஆர்வலர்கள், கல்லூரி பழைய மாணவிகள் ,பெற்றோர்கள், நலன்விரும்பிகள், அபிவிருத்தியில் ஆர்வம் உள்ள அனைத்து நிறுவனங்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

*சாவகச்சேரி கைத்தொழில்*
*வணிகர் மன்றம் சாவகச்சேரி*

*அனுசரனை வழங்குபவர்:–*
கௌரவ யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.நடராசா இரவிராஜ்

(C/3779)



### அக்கடமி ஒவ் ஃ புணாக்கொசி மார்சல் ஆட்ஸ்
### சோட்டோ கான் – ஸ்ரீலங்கா
*மற்றும்*
### மகாநதி ஜூவல்லறி

நிறுவனங்களின் ஆதரவில்
அரியாலை கல்வி வளர்ச்சி கழக மேம்பாட்டு நிதிக்காக
தேசிய விருதைப்பெற்ற நடனப்புயல்
**K.S.பாஸ்கரன்**
குழுவினருடன் ஈழத்தின் முன்னணி கலைஞர்களும், யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து வழங்கும் பிரமாண்டமான திரை இசை விருந்து

## தைய தைய

யாழ் மண்ணில் முதன் முறையாக ஏ.ஆர்.ரகுமானின் இசை நிகழ்ச்சியை ஒத்த வித்தியாசமான புதிய அரங்கம்
பாட்லுடன் ஆடல்
வர்ண ஜால ஒளியூட்டல் பல்குரல் விந்தை
இடம்:– யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம்:– 31.03.2002 ஞாயிறு பிற்பகல் 2மணிக்கு

(4899)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## சபிண்டீகரண அழைப்பும்

*அன்னையின் மடியில்* 1938 . 08 . 17



*ஆண்டவன் அடியில்* 2002 . 02 . 28

அமரர்
### திருமதி உமையம்மா சின்னத்தம்பி
(பவளம்)

ஒரு திங்கள் கடந்தனவே
குல விளக்கை நாமிழந்து
அன்பு வழிந்தொழுகும் எம் தெய்வமே
ஆருயிரே எம் குலத்தின் மணி விளக்கே
கண்ணீர் சிந்தி கலங்குகின்றோம்
கட்டி அணைத்து வளர்த்த தெய்வத்தின்
ஆத்மா இறைவனடி மலரணையில்
சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும், எமது குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர.முகவரி: கரம்பைக்குறிச்சி
வரணி
தற்.முகவரி: 154/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

இங்ஙனம்
*கணவன், பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

(C.3777)


### புலிகளுடன்..

புலிகள் ஆரம்பிக்கவுள்ளனர். தமிழீழ விதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான உயர்மட்டக்குழு அண்மையில் வன்னி சென்றிருந்த நோர்வே குழுவினரிடம் ஒப்பந்த விதிகளை அமுல்படுத்துவது தொடர்பாக வலியுறுத்தியிருந்தது.இந் நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமது அரசியல் செயற்பாடுகளை குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பிப்பதற்கு இருந்த சில நடை முறைச் சிக்கல்கள் களையப்பட்ட பின்பே தனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைப் பொருத்தவரை ,அடுத்தமாதம் 8ம் திகதி கண்டிவீதி திறக்கப்படபின்பே விடுதலைப் புலிகள் தமது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பிப்பர்

### *முதலாவது அரசியல் பணி வவுனியாவில்*

அரசியல் செயற்பாடுகள் முதன் முதலாக வவுனியாவிலேயே ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏப்ரல் முதலாம் திகதி ஏ 9 நெடுஞ்சாலையில் உள்ள ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வவுனியாவுக்கு செல்லவுள்ள புலிகளின் முக்கியஸ்தவர்களுக்கு மகத்தான வரவேற்பளிக்க வவுனியா மக்கள் தயாராகி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து மன்னார் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பர் என வன்னிச் தலைமைச் செயலகம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. (வ)

### பயங்கரவாத..

முரண்பாடுகளை அரசியல் தீர்வுகளின்ஊடாக முடிவுக்குக் கொண்டுவரும் ஒரு முயற்சியின் பாதையாக இருக்கும்.

இனப்பிரச்சனை தீர்வுக்கான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. இந்த பேச்சுக்கள் இனப்பிரச்சனைக்கான தீர்வின் முடிந்த முடிவாக இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

உலகபயங்கரவாதமும் ஜனநாயகத்தின் பாதுகாப்பும் என்ற இக் கருத்தரங்கினை இலங்கையின் அமெரிக்க கல்வியமைப்பு ஏற்பாடு செய்திருந்தது (ந-5)

### யசீர் அரபாத்தின்..

தாக்குதலில் இருபது ஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டும் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தனர்.

அதற்குப் பழிவாங்கும் முகமாகவே பலஸ்தீனத் தலைவரின் பணிமனை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. யஸீர் அரபாத்தின் உயிருக்கு உலைவைப்பது போல நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன வன்மையாகக்கண்டித்துள்ளன.

இதே வேளை லெபனானில் நடைபெறும் அரபு நாடுகளின் உச்சிமாநாட்டிற்கு ஸ்ரேலின் மோசமான நிபந்தனைகள் காரணமாக அந்த மாநாட்டை அரபாத் புறக்கணித்திருந்தமையும். குறிப்பிடத்தக்கது. (ந்.5)


## புலமைப்பரிசில் 2002

*30வது பரீட்சையில் கூடிய புள்ளி பெற்றோர்*

| | | |
|---|---|---|
| வ.தனுஜன் *(யா/இ.ஆ.பா)* | - | 180 |
| கே.மயூரன் *(கொ/இ.ஆ.பா)* | - | 176 |
| க.ஏகாந்தன் | - | 173 |
| ச.நிவேகா *(சுதுமலை சிந்மய பா.வி)* | - | 167 |
| வ.விகர்ணன் | - | 164 |
| ஆ.அலெக்ஸ் உமாசங்கர் *(யா/இ.ஆ.பா)* | - | 164 |
| வி.மீருஜா *(யா/இ.ஆ.பா)* | - | 161 |
| ஞா.சமிந்திரா | - | 150 |
| தி.வைகுந்தன் | - | 159 |
| இ.சுரேந் *(கொ/இ.ஆ.பா)* | - | 159 |

(C/3778)

**BOND**
யாழ் நகர்


# யாழ்.மாநகர முதல்வர் அமைச்சர்களுடன் பேச்சு

(யாழ்ப்பாணம் )

யாழ்.மாநகர முதல்வர் எஸ்.கந்தையன் வெளிவிவகார அமைச்சர் டிரோன்பெர்னாண்டோ, புனர்வாழ்வு, புனர்அமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன மற்றும் வெளிநாட்டு இராஜ தந்திரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்வந்திருந்த இக் குழுவினருடன் கலந்துரையாடிய முதல்வர் மாநகர சபையின் செயற்த்திட்டங்கள், பணிகள், நிதி உதவிக்கான மதிப்பீடுகள் மற்றும் சபைக்கான தேவைகள் குறித்து விரிவாக கலந்துரையாடினார்.

அத்துடன் அமைச்சர்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலை, பொதுநூலகம், தென்மராட்சியின் அழிவடைந்த பகுதிகள் , முகமாலை , இராணுவ முன்னரங்கப் பகுதிகள் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களையும் சென்று பார்வையிட்டார்(இ)

### ஸ்ரீ.சு.கட்சி

பிரசன்னமாகியிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்த விடயம் தொடர்பாக உடனடியாக எந்த விதமான நடவடிக்கையை நாம் எடுக்கவேண்டாம் என மைத்திரிபால ஸ்ரீ சேனாவைக் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதியின் இந்த வேண்டுகோளை எதிர்க்கட்சித் தலைவரும் விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளின் மத்திய குழுக் கூட்டத்தில் கட்சி பொதுத்தேர்தலிலும், உள்ளூராட்சி தேர்தல்களிலும் அடைந்த படுதோல்வி தொடர்பாக ஆராயப்பட்டு கட்சியை மீளப் புனரமைப்பதென முடிவு செய்யப்பட்டதுடன் எதிர்வரும் மேதினைத்தை சிறப்பாக கொண்டாடுவதற்கும் அது தொடர்பான வேலைகளை தொடங்குவதற்கும் எதிர்க்கட்சித் தலைவரிடம் முழுப் பொறுப்பபையும் ஒப்படைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

## கல்வியல் கருத்தரங்கு

யாழ்.விஞ்ஞானசங்கத்தின் ஏற்பாட்டில் ஏப்ரல் 5ந்திகதி பிற்பகல் 2மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஒய்வு பெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் நடைமுறைக்கல்வியியல் பற்றிய கருத்துரை வழங்கவுள்ளார் (இ)

### க.பொ.த சாதாரண...

மகளிர் கல்லூரி, இணையத்தளம் மூலம் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் செல்வி அகிதா பூபாலசிங்கம் 9A, B, ரஜிதா சண்முகலிங்கம் 9A, S, தனுஜா சற்குணநாதன் 8A, 1B, 1C இவை தவிர 7A 4பேர், 6A 7பேர், 5A 6பேர், 4A 16பேர்

### வட-கிழக்குப்..

வடக்குக் கிழக்கிற்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்ற தமிழ்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் குற்றச்சாட்டை மறுத்த பிரதமர் வடக்குக் கிழக்கு அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவிகள் நேரடியாக கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என்றும் தெரிவித்தார்.(வ)



கடந்த 2001ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்களுக்கான பரிசு வழங்கும் வைபவம் அண்மையில் யாழ் வெங்கடேசன் கல்யாண மண்டபத் தில் நடைபெற்றது. இதில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையைச் சேர்ந்த சக்தித்தாஜினி சந்தானகுமாரசர்மா கலைப்பீடாதிபதி பேராசிரியர்.கோபாலகிருஷ்ணஐயரிடம் பரிசு பெறுவதைப் படத்தில் காணலாம். (படம் உடுவில் செய்தியாளர்)




மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழக கிளையின் நீடித்த கரும பீடம் இல.38 ஆடியபாதவீதி திருநெல்வேலியில் 25.03.2002 அன்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.